# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

# இரண்டாம் தவணைப்பரீட்சை - 2017

| தரம் - 6 | குடியியற்கல்வி | நேரம் : 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |
| சுட்டெண் : | | புள்ளி |

## பகுதி - I

❖ **1 - 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.**

01. ஒரு பாடசாலையில் வரலாற்றை தெளிவாக அறிய உதவுகின்ற மூலாதாரமாக எதனைக் கருதலாம்.
   1) பாடப் புத்தகங்கள்  2) பாடசாலைச் சஞ்சிகைகள்
   3) சம்பவத்திரட்டுப் புத்தகம்  4) மாணவர் சேர்வு இடாப்பு

02. பாடசாலையொன்றின் ஒழுங்கமைப்பினுள் இடம்பெறும் குழுக்களில் ஒன்றாக எதனைக் கருதிக்கொள்ள முடியாது.
   1) சுற்றாடல் குழு  2) கூட்டுறவுக்குழு  3) சாரணர் குழு  4) நலன்புரிக்குழு

Education கல்வி அதியாபன

03. உமது பாடசாலையின் அதிபரின் கடமைகளில் ஒன்றாக அமைவது.
   1) பாடசாலை மட்டக் கணிப்பீடுகளை நடாத்துதல்
   2) மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தி செய்தல்
   3) கல்வியை விருப்புடன் கற்றல்
   4) கலைத்திட்டத்தை அமுல்படுத்துவதும் அபிவிருத்தி செய்வதும்

04. உங்களது முழுப்பெயரை சரியானதென உறுதிசெய்து கொள்ள உதவுகின்ற பொருத்தமான ஆவணம்.
   1) சேர்வு இடாப்பு  2) மாணவர் தினவரவு இடாப்பு
   3) பிறப்புச் சான்றிதழ்  4) மாணவர் அப்பியாசப் புத்தகம்

05. மாணவர்களாகிய உங்களிடம் காணப்படுகின்ற சிறந்த பண்பாக கருத முடியாத விடயம்.
   1) பொறாமை  2) எளிமை  3) பொறுமை  4) கருணை

06. கலாநிதி C.W.W கன்னங்கர தொடர்பான பொருத்தமற்ற விடயம் எது?
   1) இலவச கல்வியின் தந்தை  2) கதளுவ எனும் கிராமத்தில் பிறந்தார்
   3) எமது நாட்டின் முதலாவது கல்வி அமைச்சர்  4) சட்டத்தரணியாக பணியாற்றினார்

07. ஒரு மாணவனிடம் காணப்படக்கூடிய பலவீனமான விடயங்கள் ஒன்று.
   1) ஆனந்தமடைதல்  2) பொய்பேசாதிருத்தல்  3) பிறருக்கு உதவுதல்  4) ஆவேசப்படுதல்

08. உலக சுகாதார தாபனம் என்பதைக் குறித்து நிற்கும் ஆங்கில சுருக்க வடிவம்.
   1) W.H.O  2) I.M.F  3) U.N.I.C.E.F  4) I.L.O

09. பேராசிரியர் சேனகபிபிலே அவர்களின் பிறப்பு மாவட்டம்.
   1) மாத்தறை  2) கொழும்பு  3) கண்டி  4) காலி



kalvi.lk

10. பாடசாலைக்கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பம் அல்லாதது.
   1) இல்ல விளையாட்டுப் போட்டியின் போது
   2) காலைக் கூட்டத்தின் போது
   3) பரிசளிப்பு விழாவின் போது
   4) பாடசாலையில் நடைபெறும் விழாக்களின் போது

11. பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவராக செயற்பட்டுக் கொள்ளும் நபர்.
   1) பாடசாலை அதிபர்  2) பெற்றார் ஒருவர்
   3) கோட்டக்கல்வி அதிகாரி  4) ஆசிரியர் ஒருவர்

12. ஒரு பாடசாலை திறக்கப்படுவது எதனை மூடுவதற்கு சமனானதென மாணவர்களாகிய நீங்கள் கற்றுக்கொண்டீர்கள்.
   1) ஒரு மதுபானச்சாலை  2) ஒரு பாடசாலை
   3) ஒரு சிறைச்சாலை  4) ஒரு வங்கி

13. பாடசாலைச் சீருடை தொடர்பான பிழையான கருத்து.
   1) மாணவர்கள் சொந்தப் பணத்தில் அதனை வாங்குதல்
   2) ஆண்டுதோறும் அரசினால் சீருடைக்கான உதவி வழங்கப்படல்
   3) ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்துவமான சீருடை காணப்படல்
   4) சீருடை மூலம் பாடசாலையின் அடையாளம் வெளிப்படுத்தப்படும்

14. கூடுதலான நிருவாக மாவட்டங்களைக் கொண்டுள்ள மாகாணமாக அமைவது.
   1) மேல் மாகாணம்  2) தென்மாகாணம்  3) மத்திய மாகாணம்  4) வடமாகாணம்

15. கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் ஒன்று.
   1) முல்லைத்தீவு  2) மன்னார்  3) திருகோணமலை  4) அம்பாந்தோட்டை

16. பின்வருவனவற்றில் செயற்கையான பௌதீக வளத்திற்கான உதாரணமாக அமைவது.
   1) கட்டடங்கள்  2) காடுகள்  3) நீர்வீழ்ச்சி  4) களப்புகள்

17. தரப்பட்டவற்றில் உள்ளூராட்சி நிறுவனமாக கருதமுடியாத நிறுவனம்.
   1) மாநகரசபை  2) பிரதேசசபை  3) பிரதேசசெயலகம்  4) நகரசபை

18. பிரதேச சபையொன்றிற்கு பொறுப்பான பிரதானியின் பதவிநிலையாக கருதக்கூடியது.
   1) நகரபிதா  2) தலைவர்  3) பிரதேசப் பொறுப்பாளர்  4) தவிசாளர்

19. பின்வருவனவற்றில் 14 மணிநேரமும் சேவையை வழங்கும் பிரதான நிறுவனமாக அமைவது.
   1) பாடசாலை  2) வைத்தியசாலை  3) பிரதேசசெயலகம்  4) மாவட்ட செயலகம்

20. தனது அங்கத்தவர்களுக்கான நலன்புரி சேவையினை அதிகம் வழங்கிக்கொள்ளாத சங்கமாக அமைவது.
   1) விளையாட்டுக்கழகம்  2) மரண உதவிச்சங்கம்
   3) மீனவர் சங்கம்  4) கமத்தொழிற்சங்கம்

(20 x 2 = 40 புள்ளிகள்)




kalvi.lk

## <u>பகுதி - II</u>

❖ **முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் நான்கு வினாக்களுக்குமென எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடைதருக.**

*01.* அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள உருவில் காணப்படுகின்ற A, B, C, D, E, F ஆகிய எழுத்துக்களில் குறிப்பிடப்படும் இலங்கையின் நிர்வாக அலகுகளின் பெயர்களை எழுதுக.




(06 x 1 = 06 புள்ளிகள்)

ஆ) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடைதருக.

1) உமது பாடசாலையின் பெயரினைக் குறிப்பிடுக.

2) உமது பாடசாலை அதிபரின் பெயர் யாது?

3) நீங்கள் பாடசாலையில் தரம் I இல் சேர்ந்த ஆண்டினைக் குறிப்பிடுக.

4) உமது தற்போதைய பாடசாலையின் மகுடவாசகத்தைக் கூறுக.

5) இலங்கையில் காணப்படும் மாகாணங்கள் எத்தனை?

6) உமது பிரதேசசெயலாளர் பிரிவினைக் குறிப்பிடுக.

( 6 x 1 = 6 புள்ளிகள்)

*02.* 1) பாடசாலையின் சேர்வு இடாப்பொன்றில் காணப்படும் விடயங்கள் இரண்டினைக் கூறுக.

2) உங்களின் பாடசாலையின் அமைவிடம் தொடர்பான பின்வரும் விடயங்களை எழுதுக.

A - கோட்டக்கல்வி

B - வலயக்கல்வி அலுவலகம்

C - மாகாணம்

D - மாவட்டம்

3) பாடசாலை மாணவர்களாகிய உங்களின் கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)



kalvi.lk

03. 1) உங்களிடம் காணப்படும் பலவீனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2) சுயவிபரக் கோவையொன்றிலே இடம்பெறுகின்ற விடயங்களில் நான்கினைத் தருக.

3) ஒரு விடயம் தொடர்பாக திட்டமிடுவதாலும் ஒழுங்கமைப்பதாலும் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

04. 1) பாடசாலை இலச்சினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2) ஒரு பாடசாலையுடன் தொடர்பினைப் பேணுகின்ற சமூகக் காரணிகள் நான்கினைத் தருக.

3) ஒரு பிள்ளைநேயப் பாடசாலைச் சூழலுக்குரிய பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

05. 1) உமது பிரதேசத்தில் வளர்க்கப்படுகின்ற மிருகங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

2) இயற்கையாகக் கிடைக்கப்பெறுகின்ற பௌதீக வளங்கள் நான்கினைதத் தருக.

3) பௌதீக வளங்களை பாதுகாக்கும் முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

06. 1) பின்வரும் வளங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஒவ்வொன்று தருக.

A - களிமண்

B - பருத்தி

2) பிரதேசசெயலாளர் பிரிவினால் நிறைவேற்றப்படும் மக்களுக்கான தேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

3) சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் சேவைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)



kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457